27.09.2024



## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், துறையூர்.

## அசல் வழக்கு எண்.116/2016

## வா.சா. 2–பன்னீர்செல்வம், த/பெ. தியாகராஜன்

**சத்தியபிரமாணம் செய்துவைக்கப்பட்டது.**

**பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

கோவில் நிலத்தை பிரதிவாதிகள் ஆக்கிரமிப்பு செய்து கட்டிடம் கட்ட முயற்றி செய்கிறார் என்று இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம், நீங்கள் சொல்லிய இந்த வழக்கை தாக்கல் செய்வதற்கு உரிமையில்லை என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தில் உரு வைத்து சாமி கும்பிடுவதாக வழக்குரையில் சொல்லியுள்ளீர்கள், அந்த உரு என்வென்று சொல்ல முடியுமா என்றால் வேல்கம்பு, அருவாள், கத்தி, மணி ஆகியவை வைத்து சுமார் 1 அடி உயரத்தில் லிங்கம் வைத்து நாங்கள் சாமி கும்பிட்டு வருகிறோம். நீங்கள் சொல்வது போல் அந்தமாறி உரு எதுவும் இல்லை என்றும், வழக்கிற்காக பொய்யாக சொல்கிறீர்கள் என்றால் சரியல்ல.

02. நீங்கள் சொல்கிற உரு 2016 க்கு பின்பு தான் வைத்தார்கள் என்று சொன்னால் சரியல்ல, என் தாத்தா, பாட்டனார், மூப்பாட்டனார் காலத்திலிருந்தே உரு இருப்பதாக சாட்சி கூறுகிறார். நீங்கள் பாட்டனார் காலத்தில் உரு இருந்ததாக

கூறுவது தவறு என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தில் அரசமரம் இல்லை என்று சொன்னால் அரசமரம் இருந்தது. தற்போது இல்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் 1 ம் வாதி என்னுடைய தகப்பனார், அவருடன் சேர்ந்து யார் யாரெல்லாம் சாமி கும்பிட்டார்கள் என்றால் எங்களுக்கு பங்காளிகள் நிறைபேர் உள்ளார்கள். நிறைய பேர் உள்ளதாக சாட்சி கூறுகிறார். சாட்சி தன்னுடைய சித்தி, சித்தப்பா, மாமன் மச்சான் என்று கூறுகிறார். அவர்களை நான் இந்த வழக்கில் சேர்க்கவில்லை.

03. நாங்கள் வழக்குரையில் காலிமனை என்று சொல்லவில்லை. நீங்கள் தவறாக சொல்கிறீர்கள், உங்கள் வழக்குரையில் காலிமனை என்று சொல்லியுள்ளீர்கள் என்றால் சரியல்ல. காலிமனை என்பதால் தான் வட்டாட்சியரிடம் பட்டா கேட்டு மனு கொடுத்துள்ளீர்கள் என்றால் மனு கொடுத்தது உண்மை, கோவில் பெயரில் பட்டா கேட்டு மனு கொடுத்ததாக சாட்சி கூறுகிறார். தாவா சொத்தில் கட்டிடம் எதுவும் கட்டவில்லை என்றால் சரிதான். உங்களுடைய பிரமாண வாக்குமூலத்தில் கட்டம் இடிந்து விழுந்ததாக சொல்லியுள்ளீர்கள் என்றால் லிங்கம் நனையாமல் இருப்பதற்கு பதுவு வைத்து, அந்த பதுவில் மரம் விழுந்து உடைந்துவிட்டதாக தான் வழக்குரையில் சொல்லியுள்ளதாக கூறுகிறார். நீங்கள் சொல்வது போல் அந்த இடத்தில் பதுவு இல்லை என்று சொன்னால் சரியல்ல.

27.09.2024



04. என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் இரண்டு கொடுவாள் வைத்து சாமி கும்பிடுவதாக சொல்லியுள்ளீர்கள் என்றால் சரிதான். தாவா சொத்தின் சர்வே எண்.294/94 ஆகும். மேற்கண்ட சர்வே எண்.294/94 மேல்புறத்தில் என்ன சர்வே எண் என்றால் 294/95 உள்ளது. தாவா சர்வே எண்.294/94 கீழ்புறத்தில் சர்வே எண்.294/93 உள்ளது. நீங்கள் கோவில் நிலத்தை அனுபவம் செய்து வருவதற்கு ஆவணம் எதுவும் சொல்லமுடியுமா என்றால் ஆவணம் எதுவும் இல்லை. 1ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட கிரையப்பத்திரத்தில் சொல்லப்பட்டுள்ள நான்கெல்லை தவறு என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தில் உங்களுடைய மூதாதையர்கள் கோவில் வைத்து வணங்கினார்கள் என்று சொல்வது தவறு என்று சொன்னால் சரியல்ல.

05. நீங்கள் தாவா சொத்திற்கு பட்டா கேட்டதை பிரதிவாதிகள் ஆட்சேபனை செய்துள்ளார்கள் என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்தில் எந்தவித உரிமையும் கோர முடியாது என்று சொல்வதற்கு உங்களுக்கு உரிமையில்லை என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதிகள் அனைவரும் தாவா சொத்தில் சுவர் வைக்க முயற்சி செய்ததாக சொல்வது தவறு என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதிகள் ஒருபோதும் தாவா சொத்தில் சுவர் வைக்கவில்லை

27.09.2024



என்றும், நீங்கள் அதை தடுக்கவில்லை என்றும், அதனால் மனமாட்சரியம் ஏற்பட்டதாக வழக்குரையில் சொல்லியுள்ளது தவறு என்று சொன்னால் சரியல்ல. நீங்கள் இடைக்கால உத்தரவு வாங்கியுள்ளதா சொல்லியுள்ளது தவறு என்று சொன்னால் சரியல்ல.

06. தாவா சொத்தில் தென்னை கீற்று, இருசக்கர வாகனங்கள் நிறுத்தி வைத்துள்ளதாக சொல்வது தவறு என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தானது காலிமனை, அது அரசுக்கு பாத்தியப்பட்டது என்பதால், அரசு தரப்பினரை இந்த வழக்கில் நீங்கள் சேர்க்காமல் தாக்கல் செய்துள்ளது தவறு என்று சொன்னால் இந்த வழக்கு தாக்கல் செய்த பிறகு தான் அந்த விவரம் தெரிய வந்ததாக சாட்சி கூறுகிறார். 1ம் பிரதிவாதியின் மனைவி அஞ்சலை என்பவர் மீது காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததாக சொல்வது தவறு என்று சொன்னால் சரியல்ல. புகார் கொடுத்ததை நீங்கள் பார்த்துள்ளீர்களா என்றால் நான் தான் புகார் கொடுத்தேன். நீங்கள் சொல்வது போல் புகார் கொடுக்கவில்லை, புகார் விசாரிக்கப்படவில்லை என்றால் சரியல்ல. உங்களுடைய புகாரை அஞ்சலை தாவா இடம் கோவில் என்று ஒப்புக்கொண்டதாக சொல்வது தவறு என்று சொன்னால் சரியல்ல.

27.09.2024



காவல் நிலையத்தில் அஞ்சலை தாவா சொத்தில் ஒருபோதும் இடைஞ்சல் செய்ய மாட்டேன் என்று நீங்கள் சொல்வது தவறு என்று சொன்னால் சரியல்ல.

07. அஞ்சலையின் மீது புகார் கொடுக்கும் போது மனு ரசீது வாங்கியுள்ளோம். அந்த மனு ரசீது எண்.1211/2023 என்று சொன்னால் சரிதான். அந்த மனு ரசீது பிரதிவாதிகளை கட்டுப்படுத்தாது என்று சொன்னால் சரியல்ல. வழக்கு சம்மந்தமாக நீங்கள் சொல்லியுள்ள வாசகங்கள் முன்னுக்குபின் முரணாக உள்ளது என்றால் சரியல்ல. உங்களுடைய சாட்சியம் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல.

/உண்மை நகல்/
ஒம்/-திரு.இரா. சத்தியமூர்த்தி,
மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
துறையூர்.